

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.4.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைசெல்வன், எஸ்.எஸ். பாலாஜி, எம்.பாபு, முகமது ஷா நவாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 8.4.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தங்கச்சிமடம், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் நங்கூரம் மகளிர் கூட்டமைப்பினர் சந்தித்து, மீனவ பெருமக்களின் நல்வாழ்விற்காக 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு புதிய திட்டங்கள் குறித்து சட்டப்பேரவையில் அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், நாகை மாலி, முகமது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந. கௌதமன், மாநில மீனவ அணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 8.4.2025 அன்று முகாம் அலுவலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட மும்பை திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநகர் பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ம.நீதிதுரை, மாறன் ஆரியசங்காரன் மற்றும் பம்பாய் திருவள்ளுவர் மன்றத் தலைவரும், மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளருமான ஜேம்ஸ் தேவதாசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

### தமிழ்நாட்டில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் சாலைப்பணிகள் நடைபெறுகின்றன!

# முண்டியம்பாக்கம் - ஒரத்தூர் பிரிவு சாலை அருகே உயர்மட்ட மேம்பாலம்!

## பணிகள் விரைந்து நிறைவுறும்! பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

**சென்னை, ஏப். 11-**

**சட்டப்பேரவையில், மயிலம் தொகுதி உறுப்பினர் ச.சிவக்குமார் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்த பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு "சென்னை – திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் முண்டியம்பாக்கம் - ஒரத்தூர் பிரிவு சாலை அருகே தேசிய நெடுஞ்சாலையில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி விரைவில் முடிவுறும்" என்று அறிவித்தார்.**



சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் NH-45 முண்டியம்பாக்கம் ஒரத்தூர் பிரிவு சாலை அருகே தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்படும் உயர்மட்ட மேம்பாலத்தை விரைந்து முடிக்க வேண்டுமென்பது குறித்து சட்டப்பேரவையில் உறுப்பினர் ச.சிவக்குமார் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதற்கு பதிலளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது :-

சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை (NH45) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இச்சாலையில், முண்டியம்பாக்கம்-ஒரத்தூர் பிரிவு சாலை கி.மீ. 154/280 மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரில் கி.மீ. 154/730 (Black Spot ID No. TN-92-01&TN (02) 074) இரண்டு விபத்து பகுதிகளையும் இணைத்து விபத்து தடுப்பு நடவடிக்கைக்காக (Black Spot Improvement) வாகன சுரங்கப் பாதை 5.5 மீ. உயரத்திலும் (VUP) மற்றும் இலகுரக வாகன சுரங்கப்பாதை 4.5 மீட்டர் உயரத்திலும் (LVUP) அமைக்க ரூ.41.53 கோடி மதிப்பீட்டில் 1-8-2023 அன்று ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டு 29-8-2023 அன்று பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், சேவை சாலைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேவை சாலைப்பணி முடிந்ததும், போக்குவரத்து மாற்றம் செய்து VUP பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த சாலை என்பது சென்னையிலிருந்து திருச்சிக்கு போகிற தேசிய நெடுஞ்சாலை ஆணையம் NHAI-ன் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இந்த இடத்திலே black spot, அதாவது விபத்து ஏற்படும் என்கிற அடிப்படையில், தமிழக அரசின் சார்பாக பரிந்துரைக்கப் பட்டுதான், இப்போது அந்த விபத்துகளை தடுப்பதற்காக 5.5 மீட்டரும், சிறு வாகனங்கள் செல்வதற்காக 4.5 மீட்டருக்கும் 42 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தம்கூட கோரப்பட்டு விட்டது. ஆனால், அந்த பாலத்தை கட்ட வேண்டுமென்று சொன்னால், அது heavy traffic உள்ள area என்பதால் வருகிற வாகனங்கள் எல்லாம் செல்வதற்கு Service Road போட வேண்டியிருக்கிறது. எனவே, அந்த Service Road போடுவதற்குரிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த சேவை சாலை பணிகள் முடிந்த வுடனே, traffic-யை இரு புறங்களாக மாற்றியமைக்கப் பட்டு, அந்த சுரங்கப்பாதை விரைந்து கட்ட வேண்டுமென்று தொடர்ந்து அந்த NHAI ஆணையத்தினுடைய R.O. Regional Authority என்று சென்னையில் ஒருவர் இருக்கிறார். அவரிடம் தொடர்ந்து தொலைபேசியில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். Service Road பணிகள் முடிந்தவுடனே, அந்தப் பால பணிகள் விரைந்து நடைபெறும்.

**கூட்டேரிப்பட்டு நான்கு முனைச் சந்திப்பு**

மயிலம் சட்டமன்ற உறுப்பினர் முதன்முதலில் சட்டமன்றத்திற்கு வந்த உடனே, அவர்தான் கூட்டேரிப்பட்டு கூட்டு ரோட்டில் நான்கு முனை சந்திப்பு இருக்கிறது அங்கு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டார். இப்படி திண்டிவனம், விழுப்புரத்திற்கு இடைப்பட்டிருக்கிற மயிலம் தொகுதியில் இருப்பதெல்லாம் அவர்தான் பட்டியல் போட்டார். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், ஒன்றிய அரசாங்கத்திற்கு தொடர்ந்து கடிதம் அனுப்பி அதை வலியுறுத்தினோம். அவையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையில் அடிக்கடி விபத்து நடைபெறும் பகுதி, black spot பகுதி, அதனால், அங்கெல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று வலியுறுத்தியதன் அடிப்படையில் தான் இப்போது ஒப்பந்தங்களெல்லாம் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்களும் அந்த வழியாகத்தான் போகிறோம். நீங்களும் அந்த வழியாகத்தான் போக வேண்டும். வனத் துறை அமைச்சர் அவர்களும் அந்த வழியாகத்தான் போகிறார்கள். எனவே, அதை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். ஒப்பந்ததாரர்களின் காலம் என்று ஒன்று இருக்கிறது. அந்த ஒப்பந்தக் காலத்திற்கு முன்னால் அது நடைபெறுவதற்கு வலியுறுத்துகிறோம். அந்த ஒப்பந்தக் காலத்திற்குள் முடிப்பதற்கு வேண்டிய முன் எடுப்புகள் இந்த அரசின் சார்பாக எடுக்கப்படும்.

இன்னொன்றையும் சொன்னார்; 234 தொகுதிகளுக்கும் நெடுஞ்சாலைத் துறை பற்றிய சாலைகள் எல்லாம் equal-ஆக சமமாக தர வேண்டுமென்று சொன்னார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் தொடர்ந்து சொல்லியிருக்கிறேன். தமிழ்நாட்டிலிருக்கிற தரைப்பாலங்கள் எல்லாம்-- ஒரு தரைபாலம் இருக்கிறதென்று சொன்னால் பொதுவாக தரைப் பாலங்கள் எல்லாம் கிராமங்களிலிருந்து நகரத்தை இணைப்பதுதான். மழைக்காலங்களில் பார்க்கும்போது, குழந்தைகள் 14, 15 நாட்களாகக்கூட பள்ளிக்கூடத்திற்கு போக முடியவில்லை.

இதையெல்லாம் உணர்ந்த காரணத்தினால் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் சமமாக எண்ணிய காரணத்தில்தான், 1200-க்கு மேற்பட்ட தரைப் பாலங்களை எல்லாம் உயர் மட்ட பாலங்களாக்கப் பட்டு, அவைகளெல்லாம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது ஒன்று. இன்னொன்று, ஒன்றிய சாலைகள், ஊராட்சி சாலைகள் எல்லாம் எடுத்து தரம் உயர்த்த வேண்டுமென்று அவர் ஆணையிட்டதன் அடிப்படையிலே, ஏற்கெனவே ஏறத்தாழ 4,000 கிலோ மீட்டர், 234 தொகுதிகளிலும் எந்தப் பாகுபாடுமில்லாமல், இந்த நிதியாண்டிலேகூட 1,000 கிராமச் சாலைகளை தரம் உயர்த்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவு அளித்திருக்கிறார்கள். அதனால் இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு இவர், அவர் என்று பார்க்காமல் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் சமமே என்ற அடிப்படையில்தான் இந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து - சட்டப்போராட்டம் நடத்தி

# உயர்கல்வியைக் காப்பாற்றிய - தன்னிகரில்லாத முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேச்சு!

**சென்னை, ஏப்.11-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தின் போது பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், "உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, சட்டப்போராட்டம் நடத்தி, உயர்கல்வியைக் காப்பாற்றிய தன்னிகரில்லா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது :-


தமிழ்நாட்டு இலச்சினையில் 'வாய்மையே வெல்லும்' என்பது தமிழ்நாடு அரசு இலச்சினையில் இருக்கிற அற்புத வாசகம். அது தான் தமிழருக்கு பெருமை. தன்னிகரில்லாத தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசால் ஏற்படுகிற இடர்ப்பாடுகளையெல்லாம் களைந்து, தமிழகத்தை மீட்டெடுக்க பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார். அதனடிப்படையில், 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்ற சொற்றொடரைத் தொடர்ந்து பயன்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்விக்குத் தடையாக இருந்த ஆளுநருடைய செயல்பாட்டை நிர்மாணிக்கக்கூடிய வகையில், ஆளுநருடைய அதிகாரம் என்ன, பல்கலைக்கழகங்களில் அவருடைய செயல்பாடு என்ன என்பது குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, சட்டப் போராட்டம் நடத்தி, உயர் கல்வியை, பல்கலைக்கழகங்களை, மாணவர்களை, பேராசிரியர்களை, கல்வியாளர்களை காப்பாற்றிய தன்னிகரில்லாத தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை, பாராட்டுகளை, வாழ்த்துகளை உயர் கல்வித் துறை சார்பாக தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மற்றொன்று, 2011 மற்றும் 2016 ஆகிய இரு சட்டமன்ற தேர்தலில் திருவிடைமருதூர் தொகுதியில் போட்டியிட்டு, எதிர்க் கட்சி வரிசையில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினேன்.

2021 ஆம் ஆண்டில் திருவிடைமருதூர் தொகுதியில் 3வது முறை போட்டியிட்டு தமிழ்நடு அரசின் தலைமைக் கொறடாவாக முதலமைச்சர் அவர்களால் பணியமர்த்தப்பட்டு செயல்பட்டேன். ஆக, 13½ ஆண்டுகள் கேள்வி கேட்ட இடத்தில் பேசிய எளிய தொண்டன் கோவி. செழியனாகிய என்னை, இன்றைக்கு பதில் அளிப்பதற்கான 'எல்லோருக்கும் எல்லாம்', 'அனைவருக்கும் அனைத்தும்' என்பதை நிரூபிக்கிற திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கும், எங்களை இயக்குகிற இளந்தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டார்.



# தந்தை வழியில் தனயன் சரித்திரம் எழுதுகிறார் !

இந்திய விடுதலைத்
திருநாளில்
கொடியேற்றும் உரிமையை
முதலமைச்சர்களுக்கெல்லாம்
பெற்றுக்கொடுத்தார்
முத்தமிழறிஞர் கலைஞர்

யாம்பெற்ற உரிமை
பெறுக இவ்வையகம்
என்று உரிமையைப்
பொதுவுடைமை செய்தார்

அது அன்று

இதோ இன்று
இந்தியாவின்
எல்லா மாநிலங்களுக்கும்
உச்சநீதி மன்றத்தில் போராடி
உயர்கல்வி உரிமையைப்
பெற்றுத் தந்திருக்கிறார்
முதலமைச்சர் முத்துவேல்
கருணாநிதி ஸ்டாலின்
தந்தை வழியில்
தனயன் சரித்திரம் எழுதுகிறார்

முன்னேறுகிறார்;
முதல்வர்களுள்
முதல்வர் ஆகிறார்

இவர் சென்னையில்
இடியிடித்தால்
இந்தியாவெங்கும்
மழைபெய்கிறது

இது
கூரான வெற்றி
மற்றும்
நேரான வெற்றி

உலகமே வாழ்த்துகிறது
எங்கள் உள்ளங்களும்



- கவிப்பேரரசு வைரமுத்து

### ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பொறியாளர் அணி

# ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, ஏப். 11 -

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பொறியாளர் அணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் விண்ணப்பித்த நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.4.2025 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கோபிசெட்டிபாளையம், குள்ளம்பாளையம் பிரிவில் உள்ள சத்தீஷ் ஹோட்டலில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த நேர்காணல் கூட்டத்தில் பொறியாளர் அணிக்கு ஈரோடு வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட



ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழக ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியதை வரவேற்று ஈரோடு மத்திய மாவட்டத்தின் சார்பில் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.